Publication: Tamil Murasu
Date: 16 May 2015
Headline: SMU announces plans to redevelop its city campus

## சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழக நகர வளாக விரிவாக்கத் திட்டம்

# $20 மில்லியன் மறுமேம்பாடு

தனது நகர வளாகத்தின் மறுமேம்பாட்டுத் திட்டங்களை சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகம் (எஸ்எம்யு) அறிவித்திருக்கிறது.

அந்த மேம்பாட்டுப் பணிகளுக்குப் பிறகு, அதற்கு கூடுதல் இட வசதி கிட்டும் என்றும் அதன் மூலம் அந்த வட்டாரத்திற்கு ஏற்ற வகையில் துடிப்பாகவும் தான் செயல்பட முடியும் என்றும் 'எஸ்எம்யு' நேற்று தெரிவித்தது.

இந்த $20 மில்லியன் மறுமேம்பாட்டுத் திட்டம் வரும் ஆகஸ்ட் மாதம் தொடங்கி 2017ஆம் ஆண்டு இறுதியில் முடிவடையும்.

சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்துக்கும் சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்துக்கும் இடையே உள்ள பசுமை இடத்தின் விரிவாக்கம் மேம்பாட்டுத் திட்டத்தில் முக்கியமானது.

விரிவாக்கத்துக்குப் பிறகு இந்த திறந்தவெளி அரங்கில் ஒரே சமயத்தில் 240 பேர் அமர்ந்து நிகழ்ச்சியைக் காணலாம்.

மூன்று மாடி உடலுறுதி நிலையம், கண்ணாடிச் சுவர்கள் கொண்ட இணைப் பாட நடவடிக்கை மையம், திறந்தவெளி அரங்குக்கு அருகில் கட்டப்படும். பல்கலைக்கழக வளாகத்தைச் சுற்றிச் செல்லும் மெதுவோட்டப் பாதையும் புதிய அம்சங்களில் ஒன்று.

''போதிய மற்றும் நீக்குபோக்கான கற்றல் இடங்களை உருவாக்குவதில் பல்கலைக்கழகம் கடப்பாடு கொண்டுள்ளது,'' என்று கூறிய 'எஸ்எம்யு'வின் தலைவர் அர்னட் டி மேயர், ''மாணவர்களின் தேவைக்கேற்ப ஒத்துழைப்பு மற்றும் பொழுதுபோக்கு வசதிகளும் விரிவாக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்,'' என்றார்.

15 ஆண்டுகளுக்கு முன் இந்தப் பல்கலைக்கழகம் திறக்கப்பட்டபோது 6,000 மாணவர்களுக்குக் கற்றல் வசதிகள் இருக்குமாறு திட்டமிடப்பட்டது.

ஆனால், இப்போது மாணவர் எண்ணிக்கை 8,800க்கு உயர்ந்துவிட்டதால், சில பாடங்கள் இரவு நேரங்களிலும் சனிக்கிழமைகளிலும் நடத்தப்படுகின்றன.

''பல்கலைக்கழக வளாகத்தைச் சுற்றியுள்ள புதிய வசதிகளால், சமூக அளவில் அதிகமான மக்களைச் சென்றடையவும் முடியும்,'' என்று குறிப்பிட்ட பேராசிரியர் டி மேயர், "2017ஆம் ஆண்டுக்குள் மறுமேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்ததும், 'எஸ்எம்யு' வளாகம் மாணவர்கள், பங்குதாரர்கள், பொதுமக்கள் ஆகிய அனைவரும் கலந்துறவாடுவதற்கு, நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பதற்கு, உடலுறுதி நடவடிக்கைகளிலும் விளையாட்டுகளிலும் பயன்படுத்துவதற்கு ஒரு 'விளையாட்டு மைதானமாக' விளங்கும்,'' என்றார்.

''பிராஸ் பசா வட்டாரத்தின் துடிப்பான சுற்றுச்சூழலுக்கு மேலும் மெருகு சேர்ப்பதில் 'எஸ்எம்யு' பசுமை வளாகத்தின் புதிய அம்சங்கள் பேருதவி புரியும் என்று நம்பிக்கை கொண்டு உள்ளேன்,'' என்றும் பேராசிரியர் டி மேயர் கருத்துரைத்தார்.



மேம்பாட்டுப் பணிகளுக்குப் பிறகு சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகத்தில் கிடைக்கும் கூடுதல் இட வசதியைக் கொண்டு பல புதிய அம்சங்கள் சேர்க்கப்படும். **படம்: எஸ்எம்யு**